# 24 மணி நேர நடவடிக்கை அறையில் மாநகர் மன்றம் வெள்ள நிலவரத்தைக் கண்காணிக்கிறது!

## -டாக்டர் ஸலேஹா முஸ்தபா

(நமது நிருபர்)

கோலாலம்பூர், அக்.17– வெள்ளம் உட்பட எந்த சம்பவத்தையும் கண்காணிக்கும் வகையில் நடவடிக்கை அறையை கோலாலம்பூர் மாநகர் மன்றம் தீவிரப்படுத்தியுள்ளதாக அதற்கான பிரதமர் துறை அமைச்சர் டாக்டர் ஸலேஹா முஸ்தபா தெரிவித்தார்.

அந்த நடவடிக்கை அறையில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் நீர் மட்ட உயர்வை சிசிடிவியின் வாயிலாகப் பணியில் ஈடுபட்டுள்ள படையினர் கண்காணிப்பர். கோலாலம்பூரைச் சுற்றிலும் வெள்ளம் ஏற்படக்கூடிய 24 பகுதிகளில் ஜாலான் புடு, ஜாலான் சுல்தான், டத்தோ ஓன்சாலை வட்டச் சுற்று, ஜாலான் பீல், ஜாலான் மஹாராஜா லேலா, ஜாலான் கெந்திங் கிள்ளான் ஆகியவையும் அடங்கும்.

அப்படி நீர் மட்டம் உயர்வது கண்டுபிடிக்கப்பட்டால் உடனடி நடவடிக்கை



மேற்கொள்ளப்படும் என்று மலாயா பல்கலைக்கழகத்தில் வெள்ளம் ஏற்பட்ட பகுதியைக் கண்காணித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது செகிஞ்சான் நாடாளுமன்ற உறுப்பினரு மான டாக்டர் ஸலேஹா குறிப்பிட்டார்.